பக்கங்கள்: ஆறு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 புரட்டாதி 14 திங்கட்கிழமை (30-09-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 226

## தமிழர் - முஸ்லிம் கலவரம் கல்முனையில் வெடித்தது!

### இதுவரை 13 பேர் பலி எனத் தகவல்

கொழும்பு, செப். 30

மட்டக்களப்பு மாவட்டம் கல்முனையில் தமிழர் — முஸ்லிம் கலவரம் வெடித்திருக்கின்றது.

இக்கலவரங்களில் இதுவரை 13 பேர் உயிரிழந்திருப்பதாகச் செய்தி ஏஜென்ஸிகள் அறிவித்தன.

பாண்டிருப்பைச் சேர்ந்த சிலர் கடத்திச் செல்லப்பட்டு மர்மமான முறையில் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருப்பது அம்பலமானதை அடுத்தே கல்முனைப் பகுதியில் கலவரம் வெடித்ததாக முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன. எனினும் இக்கலவரம் பற்றிய மேலதிக விவரங்கள் இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை.

## அமைதி பேண அஷ்ரப் அவசரக் கோரிக்கை

கொழும்பு, செப். 30

கல்முனைப் பிரதேசத்தில் அமைதியையும், ஒற்றுமையையும் நிலைநாட்ட உதவுமாறு கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் அஷ்ரப் அந்தப் பகுதி மக்களுக்கு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இந்த வேண்டுகோளை இலங்கை வானொலி நேற்று ஒலிபரப்பியது. அமைச்சர் அஷ்ரப் மேலும் கோரியிருப்பதாவது :-

சில நாசகாரச் சக்திகளின் நடவடிக்கைகளால் கல்முனைப் பிரதேசத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளன.

இத்தகைய சம்பவங்களுக்கு இடமளிக்க வேண்டாம் என்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ரயிலில் குண்டு வெடிப்பு

லண்டன், செப். 30

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரானுக்கும், வாழைச்சேனைக்கும் இடையில் சென்று கொண்டிருந்த ரயிலில் நேற்று குண்டு ஒன்று வெடித்ததில் நான்கு பெட்டிகள் நாசமடைந்தன.

இக்குண்டு வெடிப்பால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து மேலதிகவிவரம் ஏதும் கிடைக்கவில்லை. (உ-3)

# கிளிநொச்சி நகரைத் துருப்புக்கள் நேற்று கைப்பற்றியதாக அறிவிப்பு!

## தடைகளை அகற்றி நிலைகளை ஸ்திரப்படுத்தும் வேலை நடக்கிறது

கொழும்பு, செப்ரெம்பர் 30

கடந்த 22 ஆம் திகதி பரந்தனில் இருந்து கிளிநொச்சியை நோக்கி '' உண்மை வெற்றி '' இராணுவ நடவடிக்கையின் மூன்றாம் கட்டத்தை ஆரம்பித்த ஸ்ரீலங்கா அரசுத்துருப்புக்கள், விடுதலைப் புலிகளுடனான எட்டு நாள் கடும் சண்டையின் பின்னர், நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றியதாக அறிவிக்கப்பட்டது.

இப்போது அங்கு தடைகளை அகற்றி தமது நிலைகளைப் பலப்படுத்தும் பணியில் அரசுத் துருப்புகள் ஈடுபட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

கடந்த ஜூலை 18 ஆம் திகதி முல்லைத்தீவு படை முகாமை விடுதலைப் புலிகள் வீழ்த்தியதை அடுத்து —

ஜூலை 26 ஆம் திகதி ஆனையிறவிலிருந்து தெற்கு நோக்கி ''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கையை ஸ்ரீலங்காத் துருப்புகள் ஆரம்பித்தன என்பது தெரிந்ததே.

கடும் சண்டைக்கு மத்தியிலும் ஆனையிறவிலிருந்து பரந்தன் வரை முன்னேறும் முதலாம் கட்ட படை நடவடிக்கையை ஸ்ரீலங்காத் துருப்புகள் மேற்கொண்டன.

''உண்மை வெற்றி'' நடவடிக்கையின் இரண்டாம் கட்டத்தின்போது பரந்தனிலிருந்து கரடிப்போக்குச் சந்திவரை படை நகர்ந்தது. அப்போதும் புலிகளின் கடும் எதிர்ப்பைத் துருப்புகள் எதிர்கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

மீண்டும் கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மூன்றாம் கட்ட படை நடவடிக்கையை பரந்தனில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி யுத்தமுனைக்கு அமைச்சர் ரத்வத்த விஜயம்

கொழும்பு, செப். 30

நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சரும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் அனுருத்தரத்வத்தை கிளிநொச்சி யுத்தமுனைப் பகுதிகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் நேரில் விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டார் என்று இலங்கை வானொலி அறிவித்தது

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தளுவத்த, விமானப் படைத் தளபதி ஏயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க, கடற்படைத் தளபதி அட்மிரல் மொஹான் சமரசிங்க, பொலீஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ராஜகுரு உட்பட பல்வேறு படை அதிகாரிகள் அமைச்சருடன் சென்றிருந்ததாக அறிவிக்கப்பட்டது. (உ-3)

## ஆட்களற்ற நகரத்தைப் பிடித்ததால் என்ன பயன்?

### பி. பி. ஸி. விமர்சகர் கேள்வி

லண்டன், செப் 30

கிளிநொச்சி நகரை அரசுத் துருப்புகள் கைப்பற்றியது உண்மையாயின் அதனால் அரசுக்கு ஏற்பட்ட லாபம் என்னவென்பது தெளிவாக இல்லை.

— இவ்வாறு பி. பி. ஸி. குறிப்பிட்டது.

படை நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு சில நாள்களுக்கு முன்னரே புலிகள் கிளிநொச்சியை விட்டு விட்டு பொது மக்களுடன் அப்பால் நகர்ந்து விட்டனர் என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

கைப்பற்றியது மக்களற்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கந்தளாயில் பொலீஸ் நிலையத்தை விடுதலைப் புலிகள் தாக்கி அழிப்பு!

### 28 பேர் பலி; ஒருவரைக் காணவில்லை

கொழும்பு, செப். 30

திருகோணமலை மாவட்டம் கந்தளாய்ப் பிரதேசத்தில் வான்எல பகுதியில் உள்ள அயிலடி பொலீஸ் நிலையம் நேற்றுஅதிகாலை விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் இரண்டு பொலீஸார், பன்னிரண்டு ஊர்காவல் படையினர், 14 பொது மக்கள் பலியானதாகவும் —

பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரைக் காணவில்லை எனவும் —

காயமுற்ற இரு ஊர்காவலர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் — கொழும்பில் அறிவிக்கப்பட்டது

பொலீஸ் நிலையத்தைத் தாக்கிய விடுதலைப் புலிகள் அங்கிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றிய பின்னர் பொலீஸ் நிலையத்தை தீயிட்டுக் கொளுத்தி விட்டுச் சென்றதாக இந்திய வானொலி அறிவித்தது. (உ-3)

## மன்னாரில் படை அதிகாரி புலிகளின் வேட்டுக்குப் பலி!

மன்னார் மாவட்டம் தாழ்வுப்பாடு பகுதியில் நேற்று முன்தினம் காலையில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்த படை அதிகாரி ஒருவர் பின்னர் உயிரிழந்தார்.

இதேசமயம் —

மன்னார் நகரில் நேற்று முன்தினம் இராணுவத்தினரை நோக்கி விடுதலைப்புலிகள் கிரனேட் வீசியதில் பொதுமகன் ஒருவர் பலியானதாகவும் —

மற்றும் நால்வர் காயமுற்றதாகவும் —

படையினருக்குச் சேதம் ஏதும் ஏற்படவில்லை எனவும் —

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் கொழும்பில் அறிவித்தது. (உ-3)

மாகாண சபைகள் கலைப்பு விவகாரம்:

# ஆளுநர்களின் மேன்முறையீடு மீதான உயர் நீதிமன்ற விசாரணை பூர்த்தி

கொழும்பு, செப். 30

வடமத்திய, சப்பிரகமுவ மாகாண சபைகளை அந்தந்த மாகாண ஆளுநர்கள் கலைத்தமை தவறானது என்று தெரிவித்து கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்த அந்த மாகாணங்களின் ஆளுநர்களால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுக்கள் மீதான விசாரணையை உயர் நீதிமன்றம் முடித்துக் கொண்டது. தீர்ப்பு வழங்குவது ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த மனுக்கள் மீதான விசாரணையை பிரதம நீதியரசர் ஜி. பி. எஸ் டி. சில்வா, நீதியரசர்கள்கலாநிதி ஏ.ஆர். பி. அமரசிங்க, பி. இராமநாதன் ஆகியோர் நடத்தினர்.

மேற்படி இரு மாகாண சபைகளையும் ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் அந்தந்த மாகாண ஆளுநர்கள் கலைத்தும் —

அதையடுத்து அந்த மாகாணங்களில் புதிய தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை தேர்தல் திணைக்களம் வெளியிட்டதும் —

ஆளுநர்கள் சபையைக் கலைத்ததை ஆட்சேபித்து அந்த மாகாணங்களின் முதலமைச்சர்கள் சமர்ப்பித்த மனுக்களை ஏற்றுக் கொண்ட மேல் முறையீட்டு நீதிமன்றம், ஆளுநர்களின் உத்தரவை சட்டமுரணானது என்று தீர்ப்பளித்ததோடு சம்பந்தப்பட்ட சபைகள் தொடர்ந்து செயற்பட அனுமதி அளித்து உத்தரவிட்டதும் தெரிந்தவையே.

அந்த உத்தரவுக்கு எதிராகவே மாகாண ஆளுநர்கள் உயர் நீதிமன்றத்திடம் மேன் முறையீடு செய்திருக்கின்றார்கள், (உ)

## சென்னைக்கு கிருஷ்ணாநதி தண்ணீர்

சென்னை, செப். 30

கிருஷ்ணாநதி நீர் ஆந்திர மானிலத்தில் இருந்து தமிழகத்துக்கு நேற்று திறந்து விடப்பட்டது.

சென்னை மக்களின் நீண்ட நாள் தேவையாக இருந்து வந்துள்ள கிருஷ்ணா நதி தண்ணீர் சென்னை பூண்டி தேக்கத்தில் வந்துசேரும் வண்ணம் ஊத்துக் கோட்டைக்கு அருகே ஆந்திர முதல்வர் சந்திரபாவு நாயுடு கால்வாய் மதகை திறந்து வைத்தார்.

ஆரம்பத்தில் 300 கோடி கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி தண்ணீரைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 'அமோனியம் சல்பேற்' உரம் எடுத்துவர அனுமதி

யாழ்ப்பாணம், செப். 30

யாழ். மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான 'அமோனியம் சல்பேற்' உர வகையை எடுத்துவர அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ் அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்தார்.

இந்த வகை உரத்தை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவர உத்தியோக பூர்வமாக தடை விதிக்கப்படாத போதும், அதனை இங்கு எடுத்துவர இது வரை அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து வரும் ''மாஹோ'' கப்பலில் எடுத்துவரப்படும் 500 மெற்றிக்தொன் "அமோனியம் சல்பேற்'' உரம் படையினரின்மேற்பார்வையிலேயே விவசாயிகளுக்கு வழங்கப்பட விருப்பதாக அரச அதிபர் தெரிவித்தார். (உ-3)

---

## கண்ணீர்ப் பூக்கள்

எமது சக மாணவன்

செல்வன் யூட்பிரணவன் அவர்களின் ஆசைத்தாயார்

### திருமதி அமிர்தநாதன் வசந்தி

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆண்டு 11 மாணவிகள் (96 O/L)
எடிசன் அக்கடமி

(42935)

---

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம் பதவி வெற்றிடம்

**உள்துறைக் கணக்காய்வாளர்:**

மேற்படி பதவிக்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சம்பளத் திட்ட இல: **105:7**

சம்பளம்: **1,105-60X4--75X11-2,170**
இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் இதர படிகளும்.

வயது: **23** ல் இருந்து **40** வயதுவரை.
(கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது)

தகைமைகள்: அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 8-ம் சம்பளத் திட்டத்தில் கணக்காளர் / உள்ளகக் கணக்குப் பரிசோதனை பதவி ஒன்றில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 9-ம் சம்பளத் திட்டத்தில் உள்ளகக் கணக்குப் பரிசோதகர் கணக்குப் பதவியலாளர் / கணக்கியல் அல்லது உள்ளகக் கணக்குப்பரிசோதனை சம்பந்தமாய் எழுதுவினைஞர் பதவி ஒன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இறுதி ஆண்டுப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல் உள்ளகக் கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமாய் மேற்பார்வை மட்டத்திலுள்ள பதவி ஒன்றில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

இ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தர) சான்றிதழ் க பொ. த. (உயர்தரம்) கணக்கியல் உட்பட 3 பாடங்களில் சித்தியுடன் கணக்கு /உள்ளகக் கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமாய் மேற்பார்வை மட்டத்திலுள்ள பதவி ஒன்றில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

விண்ணப்ப முடிவு திகதி: **15-10-96**

பிணை: சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பொதுமுகாமையாளர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம், திருநெல்வேலி என முகவரியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு **15-10-96** ஆம்திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

தகுதியற்றதும், முடிவு திகதிக்குப் பின் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பொது முகாமையாளர்
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.

(சி/3201)

---

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, நாகர்கோவில் நாகதம்பிரான் கோவில் வருடாந்த சமுத்திர தீர்த்தோற்சவம் இன்றுநடைபெறுகிறது இன்றைய திருவிழாவுடன் ஆலய வருடாந்த மகோற்சவம் நிறைவு பெறுகிறது. (அ-173)

★ ★ ★

யாழ். றக்கா வீதி புனித திரேசம்மா ஆலய வருடாந்த திருநாள் இன்று காலை திருப்பலிப் பூசை, திருச்சொரூபப் பவனியுடன் நடைபெறும். (அ-173)

## இன்று முதல் முத்திரைக்கு நிவாரணம்

பதினாறாவது தொடர் வறுமை நிவாரண முத்திரையின் 1ஆம், 2ஆம், 3ஆம் இலக்கப் புள்ளிகளுக்கான உலர் உணவுப் பொருள்கள் சாவகச்சேரி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கக்கிளைக் கடைகளில் இன்று திங்கட் கிழமை முதல் வழங்கப்படவுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் ச. சிவபால சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

அத்துடன் கடந்த மாதம் பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்பட்ட 5லீற்றர் மண்ணெண்ணெய் பெறத் தவறியவர்களுக்கு மூன்று லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (அ-117)

---


பாரதி
சித்தன்கேணி

**SPOKEN ENGLISH by BRITTO**

புதிய பிரிவு ஆரம்பம்.
**02-10-1996** புதன்
9-30 A.M.

(42934)


---

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் செகராஜாபிள்ளை

(பிரபல புகையிலை, சுருட்டு வியாபாரி)

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் செகராஜாபிள்ளை (28-09-96) அன்று சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் வைத்திலிங்கம் சரஸ்வதியின் அன்பு மகனும், இராமப்பிள்ளை - சிதம்பரத்தின் அன்பு மருமகனும், திலகவதியின் அன்புக்கணவரும், செந்தில்வேல் (மானிப்பாய் மகளிர் கல்லூரி, சித்திர ஆசிரியர்), செந்தில்குமரன், அருள்வாணி, சகிலா, செந்தூரன், யாழினி ஆகியோரின் அன்புத்தந்தையும், புனிதவதி, சற்குருநாதன், அகிலாண்டேஸ்வரி, முருகம்மை ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற இரத்தினப்பிரகாசம், இராஜேஸ்வரி, தாமோதரம்பிள்ளை, கணேசமூர்த்தி, காலஞ்சென்ற மகேஸ்வரி, யோகம்மா, இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், தட்சணாமூர்த்தி, வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புச் சகலனும், முருகையா (புகையிலை வியாபாரி, சாவகச்சேரி), காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (29-0996) நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செந்தில்வேல்
(மகன்)

அருள் வாசம்,
குமாரலிங்கம் வீதி,
இணுவில் கிழக்கு.

(42924)

---

திருமதி

### மேரி புளோறன்ஸ் மத்தியூஸ்

திருமதி மேரி புளொறன்ஸ் மத்தியூஸ் அவர்கள் 29-9-96 ஞாயிறு மாலை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பிரான்சிஸ் மத்தியூஸின் அன்பு மனைவியும், திருமதி செல்வரெட்ணம் (மேரி பேணடீன்) லியோ றாஜ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திரு யோசவ் செல்வரெட்ணம், மேரி கிரிசாந்தா (சித்திரா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிறான், றொசான் (மாணவர்கள் சம் பத்திரிசியார் கல்லூரி), பமீலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இவரது நல்லடக்கம் இன்று (30-9-96) திங்கட் கிழமை மாலை பழைய நேரம் 3 00 மணி அளவில் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும்.

தகவல்:
திருமதி பேணடீன் செல்வரெட்ணம்
(மகள்)

321/12, கதிற்றல் லேன்,
யாழ்ப்பாணம்.

(42537)

---

திருமதி

### சந்திரவதனா தனபாலசிங்கம்

அளவெட்டி வடக்கை பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி சந்திரவதனா தனபாலசிங்கம் 29-09-96 இல் காலமானார்.

இவர் தனபாலசிங்கத்தின் (உரிமையாளர் நல்லைக் குமரன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு —திருமதி நவரட்ணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற தனபாலசிங்கம் (J.P)இன் அன்புப் பேர்த்தியும், திரு —திருமதி சுப்பிரமணியம் (சோதிடர், நல்லூர்) தம்பதிகளின் அன்பு மருமகளும், கனேந்திரனின் அருமைச் சகோதரியும், திருமதி தேவகி கனேந்திரன், திருமதி பரமேஸ்வரி தர்மலிங்கம், திருமதி சிவமணி கணேசலிங்கம், சு. சண்முகநாதன் (டென்மார்க்), செல்வி யோகேஸ்வரி சுப்பிரமணியம், திருமதி சந்திரபுஸ்பராணி சூரியகுமார், செல்வி சிவதர்சினி சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-09-96) திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் இல. 258, கோவில் வீதி, நல்லூரில் நடைபெற்று பூதவுடல் செம்பாடு இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளிற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
தனபாலசிங்கம்
(கணவன்)

258, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(42933)

# கடும் இஸ்லாமியச் சட்டம் ஆப்கானிஸ்தானில் அமுல்

## பெண்கள் வீதிக்கு வரமுடியாது

காபூல், செப். 30

ஆப்கானிஸ்தானில் இஸ்லாமியச் சட்டத்தைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்துவதாக தலைநகர் காபூலைக் கைப்பற்றியுள்ள — புதிய— தலிபான் அரசு அறிவித்துள்ளது;

இச்சட்டத்தின்படி கொலைகாரர்கள் தூக்கிலிடப்படுவார்கள்; திருடர்களுக்கு கைகள் துண்டிக்கப்படும்; கலப்படக்காரர்கள் கல்லால் அடித்துக் கொல்லப்படுவர்; பெண்கள் வேலைக்குச் செல்ல முடியாது; அவர்கள் தெருவில் திரிய முடியாது; பெண்களுக்கு தனிப்பாடசாலை அமையும்.

இந்த நிலையில் இவற்றை ஏற்காத மக்கள் காபூலை விட்டு வெளியேறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கவிழ்க்கப்பட்ட கம்யூனிஸ்ட் அரசை சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி நஜிபுல்லா போன்ற தலைவர்களின் சடலங்கள் மக்கள் பார்வையில் இருந்து இப்போது அகற்றப் பட்டுவிட்டன.

இதனிடையே, பின்வாங்கி வரும் முன்னாள் அரச படையினர் நாட்டின் வடக்கு பக்கமாக தள்ளப்பட்டுவிட்டதாக தெரிகிறது.

ஆயினும் அந்த அரசின் பிரதமர் குல்முதின் ஹெக்மத்தியாருடன் பி.பி.ஸி செய்தியாளர் தொடர்பு கொண்ட போது தமது அரசு இன்னமும் நீடிப்பதாக அவர் கூறினார்.

தலிபான் என்பது ஒரு தற்காலிக விடயம் என்றும்—

அதற்கான எதிர்ப்புக்கள் தொடரும் என்றும்— அவர் மேலும் சொன்னார்.

ஆப்கானிஸ்தான் நடப்புக்கள் தொடர்பாக கருத்து வெளியிட்ட ஐ.நா. நஜிபுல்லாவின் கொலையை கண்டனம் செய்திருக்கிறது.

அந்த நாட்டின் இராணுவ மோதல்கள் பற்றியும் ஐ.நா தீவிர கவலை வெளியிட்டது.

ஆப்கானிஸ்தானின் உள் விவகாரங்களில் தலையிடுவதை நிறுத்திக்கொண்டு அங்கு அமைதித்திட்ட வெற்றிக்கு உதவுமாறு அனைத்து நாடுகளிடமும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(உ-3)

# உலக அரங்கில்

# முன்னாள் பிரதமர் ராவ் இன்று நீதிமன்றில் ஆஜர்

புதுடில்லி, செப். 30

லகுபாய் பதக் மோசடி வழக்கில் இன்று டில்லி தனி நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராக விருக்கும் முன்னாள் பிரதமர் பி.வி. நரசிம்மராவுக்கு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்கில் ராவ் இணைக் குற்றவாளியாக குற்றஞ் சாட்டப்படவிருக்கின்றார்.

நீதிமன்ற விசாரணைகளுக்கு திரண்டு வரக்கூடிய வழக்கறிஞர்கள், கட்சிப் பிரமுகர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரைச் சமாளிப்பதற்காக நீதிமன்றத்தின் நாளைய அமர்வை தற்காலிகமாக ஒரு ஸ்டேடியத்துக்கு மாற்றுவது குறித்து ஆராயப்பட்டு வந்தது.

நீதிமன்றத்திலும், சுற்றுப்புறப் பாதைகளிலும் ஐந்து பேருக்கு அதிகமாக ஒன்று கூடுவதைத் தடை செய்யும் விதத்தில் டில்லி பொலீஸ் ஆணையாளர் நேற்று முன்தினம் இப்பகுதியில் 144 தடை உத்தரவைப் பிறப்பித்தார்.

நேற்று முதல் 30 நாள்களுக்கு இந்த தடை உத்தரவு நடைமுறையில் இருக்கும்.

அதே வேளை— இன்று ராவ் நீதிமன்றத்தில் ஆஜரானதும், அவரை கைது செய்ய வாய்ப்பு உள்ளது என்று அவரது வழக்கறிஞர் தெரிவித்துள்ளதாகவும்—

அவருக்காக பீஹார் சிறையில் தனியான அறை ஒன்று அமைக்கப்படுவதாகவும்— வெரித்தாஸ் தகவல் வெளியிட்டது.

(உ-3)

# இஸ்ரேல்-பலஸ்தீன- அரபுநாடுகளின் தலைவர்கள் கூட்டம் விரைவில்?

## அமெரிக்கா முன் முயற்சி

ஜெருசலம், செப். 30

இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் இடையில் தீவிரமான சண்டை மூண்டுள்ளதை அடுத்து — அங்கு உருவாகியுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்காக — இஸ்ரேலிய, பலஸ்தீன அரபுத் தலைவர்களின் கூட்டம் ஒன்றை உடன் நடத்துவதற்கு அமெரிக்கா முயற்சி எடுத்திருக்கின்றது.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தானியாகோ, பலஸ்தீனத் தலைவர் யாஸிர் அரபாத் ஆகியோர் மட்டுமன்றி எகிப்திய அதிபர் முபாரக், ஜோர்டான் மன்னர் ஹுசைன் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்றும் அமெரிக்க அதிபர் விரும்புவதாக ஜெருசலத்தில் இஸ்ரேலிய அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கூட்டம் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் ஆதரவில் வாஷிங்டனில் நடைபெறக் கூடும் என்று சி.என்.என். செய்தி ஒன்று தெரிவித்தது.

மேற்காசிய அமைதித்திட்டத்தைக் காப்பாற்றுவதற்காக இஸ்ரேலிய — பலஸ்தீன தலைவர்களை சந்திக்க வைப்பதில் அமெரிக்கா, எகிப்து மற்றும் ஐரோப்பிய நாடுகள் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளன

(உ-3)

# தொழிலாளர் கொள்கைப் பிரகடனம்; அரசு இழுத்தடிப்பதற்கு கடும் எதிர்ப்பு

## தொழிற் சங்கங்கள் போர்க்கோலம்

கொழும்பு, செப். 30

தொழிலாளர் கொள்கைப் பிரகடனத்தைச் சட்டமாக்குவைத் தவிர்த்து, அதை அரசு இழுத்தடித்து வருவது குறித்து சீற்றமுற்றுள்ள பல தொழிற்சங்கங்கள் அரசுக்கு எதிராக போர்க்கோலம் கொண்டுள்ளன. இந்த விடயத்தில் அரசுக்கு எதிரான போக்கு தொழிற் சங்கங்கள் இடையே வலுத்து வருகின்றன.

கடந்த வாரம் 16 முக்கிய தொழிற்சங்கங்கள் கொழும்பில் அரச எழுதுவினைஞர் சேவைச் சங்க மண்டபத்தில் கூடி இது விடயத்தில் அரசுக்கு எதிராகத் தீர்மானங்களை நிறைவேற்றின.

இக்கூட்டத்தில்பங்குபற்றிய ஜனநாயகத் தொழிற் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சிறிதுங்க ஜெயசூரியா அரசின் போக்குக் குறித்து பின்வருமாறு தெரிவித்தார்:-

வருடத்தில் 4 மாதங்கள் மின்வெட்டை நடைமுறைப் படுத்தும் நாட்டில் —

வடக்கு கிழக்கில் மாத்திரமல்லாமல் தலைநகரமான கொழும்பிலும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் குண்டுகள் வெடிக்கக் கூடிய சூழ்நிலையில் —

ஆகக் குறைந்த அடிப்படை வசதிகளைத் தானும் மக்களுக்கு வழங்காத நாட்டில்—

பன்னாட்டு நிறுவனங்கள் முதலீடுகளை மேற்கொள்ளும் என நான் நம்பவில்லை.

தொழிலாளர் கொள்கைப் பிரகடனத்தைச் சட்டமாக்கினால் அது இங்கு பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடுகளைப் பாதிக்கும் என்று காரணம் காட்டிஅதைச்சட்டமாக்காமல் தவிர்ப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அரசாங்கம் மக்களை முற்றிலுமாக ஏமாற்றிவிட்டது.

அரசாங்கம் தற்போது இந்த நாட்டில் நடைபெறும் யுத்தத்திற்கு முடிவு காண வேண்டும்; சீரான மின்சார விநியோகத்திற்கு வழிகாண வேண்டும். ஆனால் அரசு இவற்றைச் செய்யாமல் தொழிலாளர்கள் மீது பழி சுமத்த முனைகிறது— என்றார்.

(உ-10)


## 59-ம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்: 06 — 03 — 1972

ஆண்டவன் அடியில்: 03 — 08 — 1996

**தியாகராஜா தவநேசன்**
(யாழ். பல்கலைக்கழக பௌதீக விஞ்ஞான பீட 2 ஆம் வருட மாணவன்)

தரணியிலே தாரகையாய் வந்துதித்த தவநேசா!
தன்னலங் கருதா சிந்தையுடன்
தாயனும் ———————— பெரிதென்றெண்ணி
தன்மானம் காக்க வென்று
தயங்காமல் எமை விட்டுச் சென்றாயே!
தவிக்கின்றோம் உனை நினைந்து.

இச் செய்தி கேட்டு, செய்தியை எமக்கு அறியத் தந்தவர்களுக்கும், நேரில் வந்து எம் துயரத்தில் பங்கு கொண்டோருக்கும், அஞ்சல் மூலம் எமக்கு ஆறுதல் அளித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

குடும்பத்தினர்.

செல்லத்துரை வீதி,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(சி/3205)


## சைவநெறி பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 30

சைவபரிபாலன சபையினால் நடத்தப்படும் ஆண்டு 11 இற்குரிய சைவநெறித் தேர்வு எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதி நடைபெறும். இதுவரை விண்ணப்பம் அனுப்பாத பாடசாலைகள் கூடிய விரைவில் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளன.

இதேசமயம் சபையால் வழமையாக நடத்தப்படும் சித்தாந்த பண்டிதர் தேர்வு அடுத்த ஆண்டு மே மாதம் முதல் வாரத்தில் நடைபெறும் என்றும்—

விண்ணப்பப் படிவங்களை தேர்வுச் செயலாளர், 125, அரசடி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

### யாழ். பல்கலைக்கழகத்துக்கு

# நிரந்தரத் துணைவேந்தரை நியமிக்கக் கோரிக்கை

யாழ். பல்கலைக்கழகத்துக்கு நிரந்தர துணைவேந்தரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். பல்கலைக் கழக பேரவை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவைக் கேட்டுள்ளது.

பேரவையின் கூட்டம் அண்மையில் நடந்த சமயம், இந்த விடயம்பற்றி ஆராயப் பட்டது. பல்கலைக்கழக வளர்ச்சியைக் கருதி நிரந்தர துணைவேந்தரை நியமிக்குமாறு கோரும் தீர்மானம் அங்கு நிறைவேற்றப்பட்டது.

பல்கலைக்கழக துணைவேந்தரை நியமிக்கும் புதிய நடைமுறையின்படி துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படும் என்றும் —

இதற்கு — வெளியார் உட்பட — எவரும் விண்ணப்பிக்கலாம் என்றும் —

இந்த விண்ணப்பங்களில் இருந்து மூவரை பல்கலைக் கழகப் பேரவை தெரிவு செய்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு சிபார்சு செய்யும் என்றும் —

அவர்களில் ஒருவரை துணைவேந்தராகப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நியமிக்கும் என்றும் —

பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் கல்விசார் உத்தியோகஸ்தர்களில் இருந்து மூவரை பல்கலைக்கழக பேரவை தெரிவு செய்து பல்கலைக்கழக ஆணைக்குழுவுக்கு அனுப்பும் நடைமுறையே இது காலம் வரை இருந்து வந்தது தெரிந்ததே.

[உ-3]

# யாழ்- பல்கலைக்குரிய பொருள்கள்வந்துசேர்ந்தன

யாழ்ப்பாணம், செப். 30

யாழ். பல்கலைக்கழகம் இயங்குவதற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களில் ஒரு தொகுதி கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட இந்தப் பொருள்களில் 18 கணணிகளும், சங்கீத உபகரணங்களும், விளையாட்டு உபகரணங்களும், ஜெனரேட்டர்களும் அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

செய்முறைப் பயிற்சிக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருள்களையும் மற்றும் சில ஜெனரேட்டர்களையும் எடுத்து வர ஏற்பாடாகியுள்ளது.

தற்போது கொழும்பில் உள்ள யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பல்கலைக்கழகம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சின்னையா பாலசிங்கம் ஆகிய எனது 563553715 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை பஸ் நிலையத்துக்கும், வின்சர் தியேட்டர் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின் வரும் முகவரியில் ஒப்படைக்கவும். சி. பாலசிங்கம், யாழ். பஸ் நிலையம். (42914)

## அக்கரைச் சீமையில்

துன்பம் நேர்கையில் நூல் எடுத்து இன்பம் சேர்க்க அராலியூர் சுந்தரம்பிள்ளையின் அக்கரைச் சீமையில் நாவலை வாசியுங்கள். இங்கிலாந்து சென்ற இலங்கையரது சுவையான கதை. மலிவுவிலை 25/-. (42818)

## திருமண சேவை

விவாகப் பொருத்தத்துக்கான குறிப்புகள், தகவல்கள் வழங்கும் சேவையில் பெற்றோர்/ பாதுகாவலர் இணைந்து பொருத்தமான மணமக்களைத் தேர்ந்தெடுங்கள். இல. 03, யாழ். வீதி. யாழ்ப்பாணம் (சிறாம்பியடி வீதி, மணியம் கட்டடம் அருகில்) [42923]

## சேவை

எல்லா விதமான தட்டச்சு வேலைகளும் செய்து தரப்படும். தொகையாக செய்பவர்களுக்கு விஷேட சழிவு உண்டு. B 418, சோலை அம்மன் வீதி, ஐயா கடையடி, மீசாலை. [42925]

## ஆங்கிலக் கல்வி

சுலபமான முறையில் எழுத, வாசிக்க, கதைக்கப் பயில ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, மே/பா ஜெயந்தி ஸ்ரோர்ஸ், இல. 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (வண்ணார்பண்ணை சிவன் சந்தி) [42909]

## ''நீமியா உரம்''

நெல் மற்றும் பயிர்களுக்குச் சிறந்த அடிக்கட்டுப் பசளை நீமியா உரம். பயிர்த் தாக்கங்களை நீக்கி அமோக விளைச்சலைத் தருவது நீமியா. கமநல சேவை நிலையங்களிலும், அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனைக்குண்டு. ''மில்க்வைற்'' [சி-3199]

## மணமகன் தேவை

உயர் குலத்தைச் சேர்ந்த அத்தம் 4ம் பாதம், 8இல் செவ்வாய் அழகிய மணமகளுக்கு மணமகன் தேவை. உத்தியோகம் அல்லது சிறந்த கல்வியுடையவர். தொடர்பு: திருமணசேவை, செ. விஜயரட்னம், நவாலி கிழக்கு, மானிப்பாய். (சி-3198)

## புலமைப்பரிசில் 97

புலமைப் பரிசில் '97' பரீட்சைக்கான முதலாவது பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் எல்லா பிரபல புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். வெளியீடு: Bond, த. பெட்டி: இல. 140, யாழ்ப்பாணம். (42897)

## ''இளமைப்பிறகல்''

உலகச் சிறுவர் தினம் இன்று. சிக்கனத்திற்கும், துரித சலவைக்கும் மில்க்வைற் சலவைப் பவுடரைப் பாவித்து, வெற்று உறைகள் பத்து அனுப்பி, ஆங்கில மொழி பெயர்ப்புடன்கூடிய 'ஆத்திசூடி'' நூலைப் பெற்றுக் கொள்ளுங்கள். ''மில்க்வைற்''. (சி-3180)

## ஓர்கன வகுபபுகள்

ஓர்கன் (Organ), கிற்றார் (Guitar), புல்லாங்குழல் (Flute) வகுப்புகள் எல்லா நாள்களிலும் பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறுகின்றன. முகவரி: இல. 238, கோவில் வீதி, நல்லூர். (ஆலயத்திலிருந்து 300 யார்) (42508)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: **22—06—1924**

உதிர்வு: **31—08—1996**

அமரர்

## விக்ரர் கிருபைராஜா செல்லையா

''கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்'' (வெளி: 14:13)

அன்னாரது 'நன்றி செலுத்தும்' ஆராதனை 30-09-96 திங்கள் மாலை 2-00 மணிக்கு தென்னிந்திய திருச்சபை (சிற்றி மிஷன்,4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.) ஆலயத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகிறோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (42926)

---

# முதலாம் வருட நினைவலைகள்



## திருமதி ந. கமலாம்பிகை

(இராசாத்தி)

மலர்வு: **16 - 03—1950**

உதிர்வு: **30—09—1995**

திதி: **18 - 10 - 1996**

அகவை யொன்றானதுவே எம்மினிய இராசாத்தி
அனுதினமும் வாடுகின்றோம் நின்பிரிவால் நீர்சிந்தி
இனியவளே எம்குடும்ப ஒளிவிளக்கே நீயின்று
ஈசனடி இணைந்தாயோ இவ்வுலகை தான்விடுத்து
பாசமுடன் நின்கரத்தை பற்றிய நற் கணவனும்
பாரினிலே நின்மடியில் தவழ்ந்திட்ட குழந்தைகளும்
நேசமுடன் நின்வரவை நோக்கியே விழித்திருக்க
நீள்துயிலேன் கொண்டாய் நிறைநிலவே கூறு.


கணவன் திரு சி. நடராசாவும்
(வ.பி.போ.ச. இலிகிதர், கோண்டாவில்),
குடும்பத்தினரும்.

68, கனகரத்தினம் வீதி,
அரியாலை. (42912)

---

# 90-ம் நாள் நினைவஞ்சலி

உதயம்: 15 — 03 — 1961



அஸ்தமனம்: 04 — 06 — 1996

## உதயம்

சண்முகராசா உதயகுமார்
(வண்ணார்பண்ணை)

உதயம் சூரியனின் உவப்புக்கு மெருகூட்டும் எம்
உதயம் மலர்முகத்தோடு எச் செயலும்
நிறைவாக்கும் அவ்
உதயம் இன்றில்லாமல் இதயங்கள் வாடுகையில்
எதையும் நாம் கோரா தாத்ம சாந்திக்கு
வேண்டுகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்:
அம்மா, அப்பா, மனைவி, மக்கள்,
சகோதர சகோதரிகள்,
மாமாக்கள், அன்ரிமார்.

(42918)

---

# அறிவித்தல்

அளவெட்டி

## கும்பழாவளை பிள்ளையார் கோவில்

நவராத்திரி, கந்தஷ்ஷ்டி, பிள்ளையார் கதை, திருவெம்பாவை, மற்றும் ஏனைய உபயங்கள்

வழமையாகச் செய்யும் உபயகாரர்கள் தங்கள் உபயங்களைச் செய்வதற்கு ஆலய பிரதம குருக்கள் அவர்களை கீழ்க்காணும் விலாசத்தில் சந்தித்து வேண்டிய ஒழுங்குகளை முற்கூட்டியே செய்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

பிரம்ம ஸ்ரீ இ. சோமசுந்தரேஸ்வரக் குருக்கள்
(மேற்படி ஆலய பிரதம குருக்கள்)

இலங்கை நாயகி அம்மன் கோவில்
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.

தலைவர்,
தர்மகர்த்தாக்கள் சபை.

(42927)

---

# SPOKEN ENGLISH WITH GRAMMAR

( 2 மாத தீவிர பயிற்சிநெறி )

★ தினசரி நீண்ட நேர வகுப்புகள்.
★ நவீன முறையில் இலகுவாக கற்பிக்கப்படும்.
★ ஆங்கில மொழியை பூரணமாக கற்கலாம்.
★ பல்கலைக்கழக மாணவர்க்கும் - உத்தியோகம் பார்ப்போருக்கும் சனி - ஞாயிறு வகுப்புகள்.

**SYLLABUS**

1) GRAMMAR 2) 1,000 EXERCISES
3) READING 4) WRITING
5) VOCABULARY 6) CONVERSATION
7) ETIQUETTE [ MANNERS ]

LECTURES by: **A. Rajagopalan**

ஆரம்பம்: **02 — 10 — 96**

நேரில் தொடர்பு கொண்டு விவரம் அறியலாம்.

## இளைய பாரதி கல்வி நிறுவனம்

யாழ் வீதி — மானிப்பாய்.

(42910)

---

# 90-ம் நாள் நினைவலைகள்

சமூக முன்னேற்றக் கழகங்களின்
சமாசப் பொருளாளர் திரு. க. நவரட்னம்
அவர்களின் அன்பு மகன்

## அமரர் நவரட்னம் புஸ்பராசா

(வர்த்தகர், மாம்பழம் சந்தி, அரியாலை)

அவர்களின் அகால மரணத்தையிட்டுத் துயருற்றுள்ள அவரின் குடும்பத்தினருக்கு எமது 90 ஆம் நாள் நினைவலைகளை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகிகள்
சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்

404/2, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (42913)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: **15—01—1942**

ஆண்டவன் அணைப்பில்: **30—09—1995**

## அமரர் செல்லப்பு பரமசாமி

(பிரதம இலிகிதர், புகையிரத திணைக்களம், மருதானை.)

திதி: **19—09—1996**

ஐவருக்கு அருமையாகப் பிறந்த
பாசமிகு அருமைத் தம்பியே!
மனைவி மக்களுடன்
யாத்திரைக்கு என்று இந்தியா சென்றபோது
நெஞ்சுவலி என்றை சாட்டைச் சொல்லி — அங்கு
காலன் உனது இன்னுயிரைக் கவர்ந்து
ஆண்டு ஒன்றும் சென்றதுவோ.
ஊருக்கும் உற்றார் உறவினர்களுக்கும்
உபகாரியாக இருந்து செய்த
சேவை எல்லாம் போதும் என்று
எண்ணியதால் அங்கு ஆண்டவன்
உன்னை அழைத்தானோ?
ஓம் சாந்தி!

உமது பிரிவால் துயருறும்:
சகோதரி திருமதி - சுசீலா கனகலிங்கம்
குடும்பத்தினர்.

189/2, ஞானபாஸ்கரோதயசங்க வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (42919)

யாழ்ப்பாணம் நல்லூர் சேனநூலகம்.

# ஐம்பது வீதசம்பள உயர்வு வெறும் வார்த்தைஜாலம்!

## 5.8 வீதமே கிடைக்கும் என்கிறது ஐ. தே. க. பத்திரிகை

கொழும்பு, செப் 30

அரச துறை ஊழியர்களுக்கு 1997 ஆம் ஆண்டிலிருந்து 50 வீத சம்பளம் அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது. என அரசு பொதுசனத் தொடர்பு சாதனங்கள் மூலம் பிரசாரங்களை மேற்கொண்டுள்ளது. ஆனால் இது முற்றிலுமான பொய்ப் பிரசாரம் என ஐ. தே. கட்சியின் பத்திரிகையான ''சியரட்ட'' தெரிவித்துள்ளது.

சம்பள ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக கடந்த ஒகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகாவினால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை அறிக்கை இல 96/1795/100/064 இன்படி உண்மையில் சம்பள அதிகரிப்பு அரச கூட்டுத்தாபன, பல்கலைக்கழக, பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்தோர் தற்போது பெற்று வரும் சம்பளத்தின் 5.8 வீதத்திற்கு மேல் இருக்காது என அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

உதாரணமாக 1993 இல் 2,010 ரூபாவை அடிப்படைச் சம்பளமாக பெற்ற ஒருவர் 1997 இல் ஒன்றிணைந்த சம்பளமாக ரூபா 3,035 ஐப் பெறுவார். அவரது அடிப்படைச் சம்பளத்தின் 50 வீதம் 1005, ரூபாவாகும். இதன்படி 1997 இல் அவரது ஒன்றிணைந்த சம்பளம் 4040, ரூபா (ரூ 3,035+ரூ 1,005) ஆக இருக்க வேண்டும். அதாவது அரசின் அறிவிப்பின்படி அவருக்கு 1997 இல் 4,040/- சம்பளமாகக் கிடைக்க வேண்டும். ஆனால் 1997 இல் அவரது அடிப்படைச் சம்பளத்தின் 50 வீதமான - 1,005 ரூபாவின் 50 வீதமான — 502.50 ரூபா மட்டுமே சம்பள அதிகரிப்பாகச் சேர்க்கப்பட்டு முழுச் சம்பளமாக அவருக்கு 3,537 ரூபா 50 சதம் மட்டுமே வழங்கப்படவுள்ளது. இதன்படி அவருக்கு 50 வீத சம்பள அதிகரிப்புக்குப் பதிலாக 5.8 வீத சம்பள அதிகரிப்பே கிடைக்கவுள்ளது என ''சியரட்ட'' பத்திரிகை தெரிவிக்கிறது.

மேற்படி அமைச்சரவைத் தீர்மானப்படி ஓய்வுதியர்களுக்கு 10 வீத ஓய்வூதிய அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும். ஆனால் ஓய்வூதியர்களுக்கு 5 வீத அதிகரிப்பு மட்டுமே கிடைக்கவுள்ளது.

மேலும் ஓய்வூதியர்களுக்கு நீண்டகாலத்திற்கு தொடர்ந்தும் ஓய்வூதியம் வழங்க முடியுமா என்பது பற்றி ஆராய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

(உ-10)

## வவுனியா ஆஸ்பத்திரி தரம் உயரும்

வவுனியா, செப். 30

வவுனியா வைத்தியசாலை ஆதார வைத்தியசாலைத் தரத்தில் இருந்து பொது வைத்தியசாலையாகத் தரம் உயர்த்த கொள்கை அளவில் சுகாதார அமைச்சு இணங்கியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

அதே வேளை இந்த வைத்தியசாலைக்குத் தேவையான உதவிகளை வழங்க பிரிட்டிஷ் அரசு முன் வந்துள்ளது.

ஈ.சி.ஜி. இயந்திரம் ஒன்றை பிரிட்டிஷ் தூதரகம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

(உ-3)

## பிரிட்டிஷ் உதவி அமைச்சர் குழுவினர் வவுனியா நிலையை நேரில் ஆராய்வு

கொழும்பு, செப் 30

இலங்கைக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் வெளிவிவகார உதவி அமைச்சர் டாக்டர் லிம் பொக்ஸ் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் வவுனியாவுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளைக் கண்டறிந்தனர்.

பிரிட்டிஷ் உதவி அமைச்சருடன், கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரும், தூதரகத்தைச் சேர்ந்த பாதுகாப்பு அதிகாரி மற்றும் இரண்டாவது, மூன்றாவது செயலாளர்கள் உட்பட அதிகாரிகளும் வவுனியாவுக்கு விஜயம் செய்தனர்.

வவுனியாவில் உள்ள பாதுகாப்பு நிலைமைகள், அங்கு வதியும் மக்களின் தேவைகள், இடம்பெயர்ந்த மக்களுக்குச் செய்யப்பட்டுள்ள வசதிகள், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், வவுனியாவுக்கு வடக்கே உள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்கள் மற்றும் வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்கள் போன்றவற்றின் நிலைமைகள் ஆகியவற்றை அறிந்து கொள்வதே உதவி அமைச்சரின் விஜயத்தின் நோக்கம் என்று வவுனியா அரச அதிபர் திரு. கே. கணேஷ் தெரிவித்தார்.

உதவி அமைச்சர் குழுவினர் தாண்டிக்குளம் பரிசோதனை நிலையம் அமைந்துள்ள பகுதி —

வன்னியின் வடக்குப் பகுதிகளுக்கு அனுப்பப்படும் பொருள்களை லொறிகளில் ஏற்றி இறக்கும் மாற்று நிலையம் —

வடபகுதி மக்களை வவுனியாவுக்குள் அனுமதிக்கும் நொச்சிமோட்டை நிலையம் —

இராணுவ முன்னரங்க நிலைகள் —

போன்றவற்றை நேற்று முன்தினம் காலையில் பார்வையிட்டனர்.

இராணுவ இணைப்பதிகாரியுடனும் உதவி அமைச்சர் குழுவினர் கலந்துரையாடினர்.

பின்னர் வவுனியா அரச அதிபர் திரு. கே. கணேஷைச் சந்தித்து உரையாடிய அவர்கள், மாலையில் வவுனியா அரசு அதிகாரிகளை ஒன்றாகச் சந்தித்தனர்.

(உ-3)

## சடலங்கள் ஒப்படைப்பது பற்றிய அறிவிப்பு குறித்து புலிகள் அதிருப்தி

மணிலா, செப். 30

கிளிநொச்சிச் சண்டையில் உயிரிழந்த விடுதலைப் புலிகளின் சடலங்களைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் தொடர்பாக வெளியான அறிக்கைகள் குறித்துச் சர்ச்சை தோன்றி உள்ளது.

சுமார் 138 புலிகளின் சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க முயற்சி எடுக்கப்பட்டதாகவும் —

அந்த முயற்சி வெற்றியளிக்காததால் அச்சடலங்கள் அந்தந்த இடங்களிலேயே புதைக்கப்பட்டதாகவும் —

ஸ்ரீலங்கா அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது தெரிந்ததே

சடலங்களைப் பொறுப்பேற்க தாம் சம்மதம் தெரிவித்து இரண்டு நாள்களாகியும் அவை தங்களிடம் இதுவரை ஒப்படைக்கப்படவில்லை என்றும் —

தனது தவறான பிரசாரத்துக்கு இலங்கை அரசு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பெயரைப் பயன்படுத்துகின்றது என்றும் —

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கிளிநொச்சிப் பிரதிநிதியான திருமதி பாபராவைத் தொடர்பு கொண்டு புலிகளின் தலைமைப் பீடம் அதிருப்தி தெரிவித்திருப்பதாக அறியவருகின்றது.

இச்சண்டையில் அரசு அறிவித்ததிலும் பார்க்க உயிரிழந்த விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை மிகக் குறைவு என்றும் புலிகள் தெரிவித்தனர்.

(உ-3)

## ஈழத் தமிழர் தமிழகத்துக்கு செல்வது வெகுவாகவீழ்ச்சி!

### கொழும்பில் அறிவிப்பு

கொழும்பு, செப். 30

போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு இலங்கையிலிருந்து தமிழ் அகதிகள் தென் தமிழ் நாட்டுக்குச் செல்லும் வீதம் வீழ்ச்சியடைந்திருப்பதாக கொழும்பிலிருந்து ஒலிபரப்பாகும் 'யெஸ் எவ் எம்.' வானொலி தெரிவித்தது.

இந்திய - இலங்கை அதிகாரிகள் இக்கடல் பிரதேசத்தில் படகு ரோந்தைத் தீவிரப்படுத்தியிருப்பதே அகதிகள் தமிழகத்துக்குச் செல்வது வீழ்ச்சியடைந்ததற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

கடந்த ஜூலையில் யுத்தம் தீவிரமடைந்த பின்னர் இதுவரை சுமார் 2 ஆயிரத்து ஐநூறு அகதிகள் தமிழ் நாட்டுக்குச் சென்றிருப்பதாக பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இதுவரை அகதிகளை ஏற்றிச் சென்ற 15 படகுகளை இந்திய அதிகாரிகள் பறிமுதல் செய்திருப்பதாகவும் —

மூன்று படகுகளை இலங்கைக் கடற்படை வழிமறித்திருப்பதாகவும் —

''யெஸ் எவ் எம்.'' மேலும் தெரிவித்தது. (உ-3)

## மரக்கறிகளின் விலைகள் திடீரென நேற்று உயர்வு

### வாழைப்பழம் விலை வீழ்ச்சி

மரக்கறி வகைகளின் விலைகள் திடீர் என்று உயர்ந்துள்ளன.

சங்கானை, மானிப்பாய், மருதனார்மடம் சந்தைகளில் திடீர் என்று மரக்கறி விலைகள் நேற்று உயர்ந்திருந்தன.

பயிற்றங்காய் கிலோ சுமார் 10 ரூபாவிலிருந்து 30 ரூபாவாகவும்—

கத்தரிக்காய் கிலோ 35 ரூபாவிலிருந்து 70 ரூபாவாகவும் இப்பொழுது விற்பனை செய்யப்படுகின்றன.

சின்ன வெங்காயத்தின் விலையும் உயர்ந்துள்ளது.

இதேவேளை — வாழைப்பழத்தின் விலை குறைந்து வருகிறது.

இதுவரை காலமும் கிலோ 80 ரூபாவாக விற்கப்பட்டு வந்தவாழைப்பழம் தற்போது 35ரூபாவாக குறைந்துள்ளது.

வலிகாமம் பிரதேசத்தில் வாழைச் செய்கை அதிகரித்துள்ளதால் தற்போது வாழைப்பழம் பெருமளவில் அறுவடையாகி வருகின்றன.

இதனையடுத்து வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சியடைந்து வருகிறது.

(அ-145-173)

## இடம் பெயர்ந்த 2 லட்சம் மக்களுக்கு நிவாரணம் தரப்படவில்லை

### வவுனியா அரச அதிபர் தகவல்

''சூரியப் பிரகாசம் — 1'' இராணுவ நடவடிக்கையின் போது இடப்பெயர்ந்த மக்களுக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் ''சூரியப் பிரகாசம்—2'' நடவடிக்கையின் போது ''உண்மை வெற்றி —2'' இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்த சுமார் இரண்டுலட்சம் மக்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கவில்லை.

— மேற்கண்டவாறு வவுனியா அரச அதிபர் திரு. கே. கணேஷ் தெரிவித்தார்.

அரச அதிபர்களால் கொடுக்கப்பட்ட தரவுகள் முற்றுமுழுதாக சரியானது என்று திருப்திப்பட முடியாதிருப்பதைக் காரணம் காட்டி இந்த நிவாரணம் வழங்கப்படவில்லை என்றும் —

இந்த நிவாரணம் வழங்க பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் —

அவர் மேலும் கூறினார்.

புள்ளி விவரங்களைத் திரட்டுவதில் அரச அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உதாரணங்களுடன் எடுத்துக் காட்டிய அவர் இப்பிரச்சினைகளைச் சம்பந்தப்பட்டோர் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் சொன்னார்.

(உ-3)

## உதயன்

### எரிபொருள் விலை உயர்வு

மின்னாமல் முழங்காமல் பெய்யும் மழைபோல —

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள்களின் விலைகளைத் திடீரென உயர்த்தியுள்ளது. பெற்றோல், சுப்பர் டீசல், டீசல், மண்ணெண்ணெய் ஆகிய முக்கிய எரிபொருள்களின் விலைகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன.

ஒரு காலத்தில், — எழுபதுகளுக்கு முன்னர் — வருடாந்த வரவு - செலவுத்திட்டத்தின்போதுதான் பொருள்களின் விலைகள் உயர்த்தப்படுவது வழக்கம். அதன் காரணமாக வரவு - செலவுத் திட்டக் காலம் என்றால் என்னென்ன பொருள்களின் விலைகள், என்னென்ன அளவில் விலை உயரப் போகின்றனவோ என்று மக்கள் அங்கலாய்ப்புடன் எதிர்பார்ப்பதுண்டு.

ஆனால் 1970ஆம்ஆண்டின் பின்னர் பாவனைப் பொருள்களின் விலைகள் நள்ளிரவோடு நள்ளிரவாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் உயர்த்தப்படும் நடைமுறை வழக்கத்துக்கு வந்தது. இந்தப் புதிய மாற்றத்தைச் செய்த ''பெருமை'' சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அப்போதைய அரசுக்கே உரியது.

இப்போதைய எரிபொருள் விலை உயர்வு அதனோடு மட்டும் நிற்கப்போவதில்லை. போக்குவரத்து, விவசாயம், கைத்தொழில் உற்பத்தி உட்பட சகல துறைகளிலும் தாக்கத்தையும், பாதிப்பையும் உண்டாக்கும்.

போக்குவரத்துக் கட்டணம் உயரும், விவசாய, கைத்தொழில், மீன்பிடி ஆகிய மூன்று பிரதான துறைகளிலும் உற்பத்திச் செலவுகளை உயர்த்தும் அதனால் விளை பொருள்கள் மற்றும் உற்பத்திப் பொருள்களின் விலைகள் இயல்பாகவே உயரும்.

இந்த உயர்வுகளை எல்லாம் இறுதியில் சுமப்பவர்கள் மக்களே. இவற்றால் இப்போது ஏற்கனவே எல்லையின்றி உயர்ந்துள்ள வாழ்க்கைச் செலவு மேலும் ஏறும்.

அடுத்த நிதி ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இன்னும் முப்பத்தெட்டு நாள்களில் சமர்ப்பிக்கப்படும் அதற்கு முன்னர் இன்னும் எத்தனையோ பொருள்களின் விலைகள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் உயர்த்தப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

அப்போது மக்கள் மீதான சுமை அவர்களின் முதுகை ஒடித்து வாழ்க்கையை கீழே சரித்து வீழ்த்தும் என்பதில் சந்தேகமில்லை. நாட்டின் ஏழ்மையும், பட்டினியும் மேலும் பெருகும். இது அரசு எதிர்ப்பு இயக்கத்துக்கு இட்டுச் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

போர் ஒன்று நாட்டில் தொடர்வதால்—

அதற்கு 6,000 கோடி ரூபா வரை செலவாகுவதால் — தான் விலை உயர்வுகள், மானிய வெட்டுக்கள் தவிர்க்க முடியாதவை ஆகின்றன

எனினும் போரை நிறுத்துவதில் ஆட்சியில் உள்ளவர்கள் உள்ளார்ந்த அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை மக்கள் நலனைப் புறந்தள்ளி தாம் நினைத்ததைச் செய்யும் போக்கையே இத்தன்மை காட்டுகிறது.

மக்களுக்காக, அவர்களின் நலனுக்காக, அரசாங்கமே அன்றி அதிகாரத்தில் உள்ளவர்களின் எண்ணப்படி அரசாங்கம் என்றநிலைப்பாடு நீங்கினால் மட்டுமே இந்த நாடு விமோசனத்தைப் பற்றிச் சிந்திக்க முடியும்!

# பெண்கள், மாணவரை கௌரவமான முறையில் சோதிக்கக் கோரிக்கை

## யாழ். பிராந்திய இராணுவத் தளபதியுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், செப். 30
யாழ்ப்பாணத்தில் உள்ள பாதுகாப்புச் சோதனை நிலையங்களில் பெண்களும், பாடசாலை மாணவர்களும் சோதனைக்கு உட்படுத்தப்படும் போது அவர்கள் கௌரவமாக நடத்தப்பட வேண்டும் எனறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவிடம் மேற்கண்ட கோரிக்கையை சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு விடுத்தது.

இக் குழுவின் தலைவர் சி. வி. கே. சிவஞானம், உப தலைவர்கள் ரி.எஸ். குமரேசன், டி.ஆர். அருமைநாயகம், இணைச் செயலாளர் அருட்திரு. ஜே.பி.ஈ. செல்வராஜா ஆகியோர் கொண்ட தூதுக்குழு யாழ். பிராந்தியத் தளபதியை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியது. அப்போதே மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டது.

குழுவால் முன்வைக்கப்பட்ட மற்றும் சில கோரிக்கைகள் வருமாறு:-

★ தற்போது மீனுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் கூடுதலான கடற் பிரதேசத்தில் மீன் பிடிக்க அனுமதிக்க வேண்டும்.

★ பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள் வழங்கப்பட வேண்டும்.

★ தபாற் சேவைகள் சீராக்கப்பட வேண்டும்.

★ யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்வதில் உள்ள போக்குவரத்துக் கஷ்டங்களைத் தீர்க்க வேண்டும்.

★ குடாநாட்டில் நடைபெறும் கைதுகள், காணாமற் போதல் போன்ற விடயங்கள் குறித்தும் தூதுக் குழுவினர் மேஜர் ஜெனரல் ஜானக கவனத்துக்குக் கொண்டு வந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளனர்.

தமது கோரிக்கைகளைச் சாதகமாகப் பரிசீலிப்பதாக பிராந்தியத் தளபதி உறுதியளித்ததாக தூதுக்குழுவினர் தெரிவித்தனர். (அ-3)

---

ஆட்களற்ற..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வெறும் நகரம்தான் என்றால் அதைக் கைப்பற்றுவதற்குத் தேவைப்பட்ட முயற்சியை விட கூடுதலான முயற்சியும் சிரமமும் கிளிநொச்சியைத் தன் வசம் வைத்திருப்பதற்கு அரசுத் துருப்புகளுக்குத் தேவைப்படும்.

வடக்கின் பெரும் பகுதி இன்னமும் புலிகளின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. அதே நேரம் கிழக்கிலும் அவர்கள் மிகச் சுறுசுறுப்பாக இயங்குகின்றார்கள் — இவ்வாறு பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது. (உ-3)

---

அமைதி பேண..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இரு சமூகத்தினரையும் வினயமாக கேட்டுக் கொள்கிறேன்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம்பதவிக்கு வர முன்னர் தமிழ் — முஸ்லிம் மக்களின் ஐக்கியத்தை குலைப்பதில் ஈடுபட்ட சக்திகள் மீண்டும் தற்போது தலைதூக்க முயற்சி செய்து வருகின்றன. அவற்றுக்கு இடமளிக்க வேண்டாம். — என்று தெரிவித்துள்ளார். (உ-3)

---

சென்னைக்கு..
(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பெற்றுக் கொண்டு நினைவுக் கல்லைத் திறந்து வைத்தார்.

கிருஷ்ணா நதி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் சென்னை மக்களுக்கு முன்னரை விட நாளாந்தம் இருமடங்கு தண்ணீர் இனிக் கிடைக்கும் என்று முதலமைச்சர் கருணாநிதி அறிவித்தார். (அ-3)

---

கிளிநொச்சி.
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இருந்து ஆரம்பித்த துருப்புகள் நேற்று மாலை கிளிநொச்சி நகரை அடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி நகரைக் கைப்பற்றும் மூன்றாம் கட்ட இராணுவ நடவடிக்கைக்கு எதிராக புலிகள் ஆவேசத்துடன் போரிட்டனர் என்றும் —

மூன்றாம் கட்ட யுத்தத்தின் போது இராணுவத் தரப்பில் 255 பேர் உயிரிழந்ததாகவும் —

புலிகள் தரப்பில் 750 பேர் வரைக் கொல்லப்பட்டதாகவும் —

அரசுத் தரப்பு அறிவிப்புத் தெரிவித்தது.

கிளிநொச்சி நகரை அரசுத் துருப்புகள் கைப்பற்றிய பின்னரும் அப்பகுதியில் மோதல் இடம்பெற்று வருவதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-3)

---

## ஓராண்டு நினைவு அஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 29 — 09 — 1956 | 12 — 10 — 1995 |

**அமரர் சின்னவி திருச்செல்வம்**
(முன்னாள் சாரதி, கரவெட்டி ப. தெ. வ. அபிவிருத்திச் சபை)

திதீ: **30 — 09 — 96**

திருமலையில் பிறந்து வளர்ந்து வடமராட்சியில் அமரரான எம் தெய்வமே! உங்கள் நினைவு எங்கள் இதயங்களில்.

ஜெகதீஸ்வரி (மனைவி)
பசுபதி மாமி, உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

வீரபத்திரர் கோயில் தெற்கு,
உடுப்பிட்டி.
(சி/3207)

---

## சந்தை நாளை முதல் இயங்கும்

செம்பியன்பற்று, செப். 30
மாமுனையில் இயங்கி வந்த பொதுச் சந்தை மீண்டும் நாளை முதலாம் திகதி தொடக்கம் இயங்கும்.

இச்சந்தை இவ்வருடம் மே மாதம் 16 ஆம் திகதிக்குப் பின்னர் இயங்காமல் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

சந்தை இயங்காதிருந்ததால் இப்பகுதிக் கடற்றொழிலாளர்கள் உட்பட வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். (ஆ-36)

## துணுக்காயில் குண்டு வீச்சு

கொழும்பு, செப். 30
முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காயில்கடந்த வியாழன் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

அடையாளம் காணப்பட்ட புலிகளின் நிலைகளை இலக்கு வைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## பஸ் சேவை சீரில்லை

தென்மராட்சி, செப். 29
தென்மராட்சியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான பஸ் சேவை காலை வேளைகளில் ஒழுங்காக நடைபெறாததால் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த அரச ஊழியர்கள், மாணவர்கள், வைத்திய சிகிச்சைக்குச் செல்லும் நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள் பல மணி நேரம் பஸ் நிலையங்களிலும், வீதியோரங்களிலும் காவல் இருக்க வேண்டியிருக்கிறது.

காலை மிருசுவிலிலிருந்து புறப்படும் பஸ் சில நாள்களில் தாமதமாக வருவதால் யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் அரச ஊழியர்கள், மாணவர்கள், கிளினிக்குகளுக்குச் செல்லும் நோயாளர்கள் குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்லும் தமது முயற்சியைக் கைவிட்டு வீடு திரும்புவதைக் காணமுடிகிறது.

பஸ்ஸை எதிர்பார்த்து ஏமாறும் பொதுமக்கள் தனியார் பஸ்கள் மூலம் யாழ்ப்பாணம் செல்வதையும் காணமுடிகிறது (உ-117)

---

## ராவ் தொடர்பான வழக்கு விசாரணை எங்கு நடக்கும்?

### இன்று காலையே முடிவாகும்

புதுடில்லி, செப். 30
லகுபாய் பதக் மோசடி வழக்குத்தொடர்பாக விசேட நீதிபதி அஜித் பாரிபொக் முன்னிலையில் ஆஜராகும் முன்னாள் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் நீதிமன்றத்துக்கு வரும் சமயம் றவைகள் துளைக்கமுடியாத மார்புக் கவசங்களை தனது உடைக்குள் அணிந்து வருவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வழக்கு விசாரணை இன்று எங்கு, எத்தனை மணிக்கு நடைபெறும் என்பது நேற்றிரவு வரை நிச்சயமாகவில்லை.

இந்த வழக்கு விசாரணையை நடத்தும் நீதிமன்றத்தின் அமர்வை புதுடில்லி விளையாட்டரங்கு ஒன்றில் நடத்த வேண்டும் என்று கோரும் மனுவை இந்திய அரசு நேற்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது என்றும் —

அம்மனு மீதான விசாரணை இன்று காலை உயர் நீதிமன்றத்தில் பூர்த்தியான பின்னரே நரசிம்மராவ் தொடர்பான வழக்கு விசாரணை எங்கு நடைபெறும் என்பது தீர்மானிக்கப்படும் என்றும் —

தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் நீதிமன்ற அமர்வை இடமாற்றக்கோரி புதுடில்லி மேல் நீதிமன்றத்தில் இந்திய மத்திய அரசு தாக்கல் செய்த மனு நேற்று நிராகரிக்கப்பட்டதை அடுத்தே, உடனடியாக உயர் நீதிமன்றத்தில் அது தொடர்பான மேன் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

(முன்னர் வந்த செய்தி 3ஆம் பக்கத்தில்)

(உ-3)

## கண்டி வீதி ஓர வேலிகளை அகற்றும் வீட்டுக்காரர்கள்

தென்மராட்சி, செப். 30
யாழ். — கண்டி வீதியில் நாவற்குழிக்கும் பளைக்கும் இடைப்பட்ட பகுதிகளில் பல இடங்களில் வீதியின் இருமருங்கிலும் உள்ள வேலிகள், அவற்றில் அடைக்கப்பட்டிருந்த ஓலைகள், மட்டைகள் போன்றவை அந்தந்த வீட்டு உரிமையாளர்களால் அகற்றப்பட்டு வருகின்றன.

படையினரின் அறிவுறுத்தலின் பிரகாரம் பாதுகாப்புக் காரணங்களுக்காக இவை அகற்றப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இவ் வீதியில் ஆங்காங்கே இரு மருங்கிலும் காணப்பட்ட மரங்களினதும் வேலிகளில் உள்ள மரங்களினதும் கிளைகள் வெட்டப்படுகின்றன. (உ-117)

## வெங்காயத்தை விற்க காத்திருக்கும் விவசாயிகள்

வலி.தென்மேற்கு, செப். 30
வலிகாமம் தென் மேற்குப் பகுதிகளில் விவசாயிகளிடமிருந்து வெங்காயக் கொள்வனவு இன்னும் இடம்பெறவில்லை.

அறுவடை செய்த பெருமளவு வெங்காயத்தைக் கைவசம் வைத்துக் கொண்டு யாழ். செயலகத்தின் பதிலை எதிர்பார்த்த வண்ணம் விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

இப்பகுதியில் சிலர் சுமார் 100 அந்தர் வெங்காயத்தைக் கூட வீடுகளில் வைத்துள்ளனராம்.

தற்போதைய விலை வீழ்ச்சி காரணமாக உள்ளூரில் வெங்காயத்தை விற்பனை செய்யாமல் அவற்றை விவசாயிகள் வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெங்காயக் கொள்வனவு தொடர்பாக செயலகத்தில் இருந்து அறிவிப்பு எதுவும் வராததால் விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர். (உ-145)

## நீர்கொழும்புத் தாக்குதல்: புதிய தடயங்கள் சிக்கின

கொழும்பு, செப். 30
கடந்த வாரத்துக்கு முதல் வாரம் நீர்கொழும்புப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுப் படுகொலைகள் தொடர்பாக புதிய தடயங்கள் கிடைத்துள்ளன என பொலீஸ் விசாரணையாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி எம். பியான அனுரா பண்டாரநாயக்கா சென்ற வாகன அணி மீதே மற்றொரு வாகனத்தில் வந்தவர்களால் வேட்டுகள் தீர்க்கப்பட்டன என்பது தெரிந்ததே.

தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள வாகன உரிமையாளர்களுக்கும் கொலைச் சந்தேக நபர்களுக்குமிடையே தொடர்பு இருப்பதாகத் தெரிய வருகிறது என்றும் —

இந்தச் சம்பவம் இடம்பெறுவதற்கு சற்று முன்னர் வாகன உரிமையாளர்களுக்கும் கொலையாளிகளுக்குமிடையே உரையாடல்கள் நடைபெற்றதாக தகவல் கிடைத்துள்ளன என்றும் —

இலங்கை வானொலி அறிவித்தது. (உ-10)

## நாகர் கோயிலில் திருட்டு அதிகரிப்பு

நாகர் கோவில், குடாரப்பு பகுதிகளில் இரவு நேர திருட்டு அதிகரித்து வருகிறது.

அண்மையில் நாகர்கோவில் வடக்கில் வீடு ஒன்றில் நள்ளிரவில் புகுந்த திருடர்கள் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தி பொன்னையா வடிவேலம்மா (வயது 48)என்பவரது தாலிக் கொடியை அறுத்துச் சென்று விட்டதாகக் கூறப்படுகின்றது. (உ-36)




தரமான புளொக்குகளைத் தயாரிக்க
யாழ். நகரில் ஒரே நிறுவனம்

**அருண் புளொக் தயாரிப்பாளர்கள்**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2, இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30 - 09 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.